# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## HIGHER SECONDARY SECOND YEAR

## Unit 2 / 10 days study questions

## கணக்குப்பதிவியல்

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு

(அ) பெயரளவு கணக்கு (ஆ) சொத்து கணக்கு

(இ) ஆள்சார் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதிவு செய்யப்படும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்

(அ) வருவாயினத் தன்மை மட்டும் உடையது

(ஆ) முதலினத் தன்மை மட்டும் உடையது

(இ) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது

(அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்

(ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்

(இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள்

(ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு

4. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு

(அ) பெயரளவுக் கணக்கு (ஆ) சொத்து கணக்கு

(இ) ஆள்சார் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

5. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது

(அ) இலாபம் அல்லது நட்டம்

(ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு

(இ) உபரி அல்லது பற்றாக்குறை (ஈ) நிதிநிலை

6. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?

(அ) பழைய செய்தித்தாள்கள் விற்றது

(ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம்

(இ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம்

(ஈ) அறைகலன் விற்ற தொகை

7. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது

(அ) ஒரு சொத்து (ஆ) ஒரு பொறுப்பு

(இ) ஒரு செலவு (ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

8. உயில்கொடை ஒரு

(அ) வருவாயினச் செலவு (ஆ) முதலினச் செலவு

(இ) வருவாயின வரவு (ஈ) முதலின வரவு

9. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை

(அ) வருவாயின வரவு (ஆ) முதலின வரவு

(இ) வருவாயினச் செலவு (ஈ) முதலினச் செலவு

10. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ரூ.100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ரூ.200; முன்கூட்டிப் பெற்ற சந்தா ரூ. 300. வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.

(அ) ரூ. 50,000 (ஆ) ரூ. 50,200 (இ) ரூ. 49,900 (ஈ) ரூ. 49,800

### மிகக் குறுகிய வினாக்கள்

1. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.

3. உயில்கொடை என்றால் என்ன?

4. ஆயுள் உறுப்பினர் கட்டணம் - சிறு குறிப்பு தரவும்.

### குறுகிய வினாக்கள்

2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

4. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதி கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன?

(அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை

(ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்

(இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி

மருதம் அகாடமி YouTube channel 9659838789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy 10th to 12th important Questions upload soon.

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## படிவம்:

பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் படிவம்

ப ...ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | இருப்பு கீ/கொ | | |
| கைரொக்கம் | xxx | | வங்கி மேல்வரைப்பற்று | | xxx |
| வங்கி ரொக்கம் | xxx | xxx | | | |
| வருவாயின வரவுகள்: | | | வருவாயினச் செலுத்தல்கள்: | | |
| சந்தா | | xxx | சம்பளம் | | xxx |
| நுழைவுக் கட்டணம் | | xxx | வாடகைச் செலுத்தியது | | xxx |
| பொது நன்கொடைகள் | | xxx | மின் கட்டணம் | | xxx |
| மானிய உதவி | | xxx | அஞ்சல் செலவுகள் | | xxx |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | | xxx | வாடகையும் வரியும் | | xxx |
| முதலீடு மீதான வட்டி | | xxx | காப்பீடு | | xxx |
| பங்காதாயம் | | xxx | விளம்பரம் | | xxx |
| பாதுகாப்பு பெட்டக வாடகைப் பெற்றது | | xxx | தொலைபேசிக் கட்டணம் | | xxx |
| வாடகைப் பெற்றது | | xxx | பொழுதுபோக்குச் செலவுகள் | | xxx |
| பல்வகை வரவுகள் | | xxx | தணிக்கைக் கட்டணம் | | xxx |
| முதலின வரவுகள்: | | | பழுதுபார்ப்புச் செலவுகள் | | xxx |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | xxx | மைதான பராமரிப்புச் செலவுகள் | | xxx |
| குறிப்பிட்ட நோக்கத்திற்காக | | | போக்குவரத்துச் செலவுகள் | | xxx |
| பெற்ற நன்கொடை | | xxx | செய்தித்தாள்கள் மற்றும் | | |
| உயில்கொடை | | xxx | பருவ இதழ்கள் | | xxx |
| அறக்கட்டளை நிதி | | xxx | அலுவலகச் செலவுகள் | | xxx |
| நிலைச்சொத்துகள் விற்ற தொகை | | xxx | தோட்டப் பராமரிப்புச் செலவுகள் | | xxx |
| முதலீடுகள் விற்ற தொகை | | xxx | பல்வகைச் செலவுகள் | | xxx |
| குறிப்பிட்ட நோக்கம் அல்லது நிதி | | | முதலினச் செலவுகள்: | | |
| மூலம் பெற்ற வரவுகள் | | xxx | நிலைச் சொத்துகள் | | xxx |
| குறிப்பிட்ட நிதி முதலீடுகள் | | | முதலீடுகள் | | xxx |
| மீதான வட்டி | | xxx | கடன் திரும்பச் செலுத்தியது | | xxx |
| இருப்பு கீ/இ | | | இருப்பு கீ/இ | | |
| வங்கி மேல்வரைப்பற்று | | xxx | கைரொக்கம் | xxx | |
| | | | வங்கி ரொக்கம் | xxx | xxx |
| | | xxx | | | xxx |

### 2.5.2 வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் படிவம்

சங்கம் / நிறுவனத்தின் பெயர்

ப ...... நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ |
|---|---|---|---|
| சம்பளம் | xxx | சந்தா | xxx |
| அறக்கொடை | xxx | நன்கொடைப் பெற்றது | xxx |
| வாடகை | xxx | சேர்க்கைக் கட்டணம் பெற்றது | xxx |
| நன்கொடை செலுத்தியது | xxx | மானியம் பெற்றது | xxx |
| எழுதுபொருள் | xxx | வாடகைப் பெற்றது | xxx |
| நிலைச்சொத்து விற்பனை மீதான நட்டம் | xxx | வட்டிப் பெற்றது | xxx |
| தேய்மானம் | xxx | நிலைச்சொத்து விற்பனை மீதான இலாபம் | xxx |
| உபரி * | xxx | பற்றாக்குறை * | xxx |
| (செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானங்கள்) | | (வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள்) | |
| | xxx | | xxx |

ப ... நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|
| | | சந்தா | xxx | |
| | | கழிக்க: முந்தைய ஆண்டிற்கான சந்தா | xxx | |
| | | | xxx | |
| | | கழிக்க: எதிர்வரும் ஆண்டிற்கான சந்தா | xxx | |
| | | | xxx | |
| | | கூட்டுக: நடப்பாண்டிற்குரிய பெறவேண்டிய சந்தா | xxx | |
| | | | xxx | |
| | | கூட்டுக: முந்தைய ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற நடப்பாண்டிற்குரிய சந்தா | xxx | xxx |

.....ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| எதிர்வரும் ஆண்டிற்குரிய சந்தா முன்கூட்டிப் பெற்றது | xxx | சந்தா பெற வேண்டியது: | |
| | | நடப்பு ஆண்டு | xxx |
| | | முந்தைய ஆண்டு | xxx |

## பயிற்சி வினாக்கள்:

**எடுத்துக்காட்டு 2**

திருச்சி கல்வியியல் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.1.2018) | 20,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 12,000 |
| முதலீடுகள் செய்தது | 80,000 | அறைகலன் விற்றது | 5,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 3,000 | பொதுச்செலவுகள் | 7,000 |
| நன்கொடை பெற்றது | 80,000 | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | சந்தா பெற்றது | 10,000 |

**எடுத்துக்காட்டு 4**

பூம்புகார் இலக்கிய மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.4.2018) | 5,000 | சந்தா பெற்றது | 20,000 |
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | 4,000 | பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 2,500 |
| அச்சு மற்றும் எழுதுபொருள் | 1,500 | போக்குவரத்துச் செலவுகள் | 2,750 |
| வட்டி செலுத்தியது | 3,250 | புத்தகங்கள் வாங்கியது | 10,000 |
| முதலீடுகள் விற்றது | 1,000 | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 4,000 |
| சிற்றுண்டி வாங்கியது | 1,500 | பல்வகை வரவுகள் | 750 |
| கொடுபட வேண்டிய சம்பளம் | 2,000 | அரசிடமிருந்து பெற்ற மானியம் | 6,000 |
| அறக்கொடை நிதி பெற்றது | 2,000 | சிற்றுண்டி விற்றது | 1,500 |
| ஒளியூட்டுக் கட்டணம் | 1,300 | கட்டடம் மீதான தேய்மானம் | 2,000 |
| | | வங்கி ரொக்கம் (31.3.2019) | 2,000 |

**எடுத்துக்காட்டு 7**

கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018,மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய்மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | அறைகலன் வாங்கியது | 10,000 |
| கைரொக்கம் | 11,000 | வாடகை | 2,800 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | தபால் செலவுகள் | 1,700 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | பொதுச் செலவுகள் | 4,350 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | அச்சு மற்றும் எழுதுபொருள்கள் | 45,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | தணிக்கைக் கட்டணம் | 5,000 |
| அறைகலன் விற்றது | 5,000 | இறுதி இருப்பு | |
| (ஏட்டு மதிப்பு ₹ 4,400) | | கைரொக்கம் | 3,000 |
| | 86,850 | | 86,850 |

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy 10th to 12th important Questions upload soon.

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy


எடுத்துக்காட்டு 10

ஒரு சங்கத்தின் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு தோன்றும்? 2016-17 ல் அச்சங்கம் பெற்ற சந்தா ₹ 25,000. இதில் 2015-16 ஆம் ஆண்டுக்கான சந்தா ₹ 2,000 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுக்கான சந்தா ₹ 1,500 சேர்ந்துள்ளது. 2016-17 ஆம் ஆண்டிற்கான சந்தா ₹ 500 இன்னும் பெற வேண்டியுள்ளது.

எடுத்துக்காட்டு 16

கரூர் சமூக மன்றத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய முதல் நிதியினைக் கணக்கிடவும்.

| விவரம் (31.03.2018) | ₹ |
|---|---|
| அறைகலன் | 50,000 |
| கட்டடம் | 40,000 |
| 2017–18 ஆம் ஆண்டிற்கான சந்தா பெறவேண்டியது | 10,000 |
| 2018–19 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது | 5,000 |
| கடன் வாங்கியது | 10,000 |
| முதலீடுகள் | 20,000 |
| கைரொக்கம் | 4,000 |
| வங்கி ரொக்கம் | 6,000 |

எடுத்துக்காட்டு 20

டில்லி இலக்கிய மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு பின்வருமாறு.

டில்லி இலக்கிய மன்றம்

ப 2016, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | வாடகையும் வீதமும் | 21,000 |
| கைரொக்கம் | 3,200 | விரிவுரை கட்டணம் | 4,500 |
| நுழைவுக் கட்டணம் | 2,300 | பல்வகைச் செலவுகள் | 7,200 |
| சந்தா | 46,000 | நிலை வைப்பு | 40,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | 2,500 | இருப்பு கீ/இ | |
| நிலை வைப்பின் மீதான வட்டி பெற்றது | 500 | கைரொக்கம் | 4,300 |
| அறைகலன் விற்றது (1.4.2018) | 22,500 | | |
| (ஏட்டு மதிப்பு ₹ 25,000) | | | |
| | 77,000 | | 77,000 |

கூடுதல் தகவல்கள்:

(அ) ஆண்டு தொடக்கத்தில் மன்றத்தில் இருந்த நூல்கள் மதிப்பு ₹ 20,000 மற்றும் அறைகலன் மதிப்பு ₹ 40,000.

(ஆ) நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹ 1,000.

சங்கத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

19. சேலம் விளையாட்டு மன்றத்தின் 2019, ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதியைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் | 30,000 | பரிசு நிதி | 10,000 |
| கணிப்பொறி | 25,000 | பரிசுநிதி முதலீடுகள் | 10,000 |
| 2018–2019 ஆம் ஆண்டில் சந்தா பெறவேண்டியது | 5,000 | கைரொக்கம் | 7,000 |
| 2019–20 ஆம் ஆண்டிற்காக முன்கூட்டிப் பெற்ற சந்தா | 8,000 | வங்கி ரொக்கம் | 21,000 |

எடுத்துக்காட்டு 21

மதுரை மாநகர மன்றத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.

மதுரை இலக்கிய மன்றம்

ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | மைதான பராமரிப்பு | | 16,500 |
| ரொக்கம் | 500 | | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | | 19,000 |
| வங்கி | 7,000 | 7,500 | பல்வகைச் செலவுகள் | | 11,000 |
| சந்தா (2016–17 ஆம் ஆண்டிற்கான | | | அறைகலன் | | 20,000 |
| ₹ 4,000 உட்பட) | | 30,000 | இருப்பு கீ/இ | | |
| உயில்கொடை | | 9,000 | கைரொக்கம் | 1,500 | |
| அரங்க வாடகை | | 10,000 | வங்கி ரொக்கம் | 11,000 | 12,500 |
| விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | | 22,500 | | | |
| | | 79,000 | | | 79,000 |



www.freetnbooks.com

tancy-Unit-02.indd 67 12/9/2021 1

கூடுதல் தகவல்கள்:

2017, ஏப்ரல் 1 அன்று மன்றத்தின் முதலீடு ₹ 40,000 ஆக இருந்தது. மன்றத்தின் விளையாட்டுப் போட்டி நிதிக் கணக்கின் வரவிருப்பில் ₹ 30,000 இருந்தது. 2017, மார்ச் 31–ல் பெறவேண்டிய சந்தா ₹ 4,000 மற்றும் 2018, மார்ச் 31 அன்று பெறவேண்டிய சந்தா ₹ 4,500. இறுதிக் கணக்குகளைத் தயார் செய்யவும்.

4. மயிலாடுதுறை மனமகிழ் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு | 15,000 | காவலாளிக்குச் சம்பளம் கொடுத்தது | 12,000 |
| தொடக்க வங்கி இருப்பு | 25,000 | மன்ற ஆண்டு விழாச் செலவுகள் | 15,000 |
| நன்கொடைகள் பெற்றது | 48,000 | ஒளியூட்டுச் செலவுகள் | 16,500 |
| பழைய உபகரணங்கள் விற்றது | 26,000 | பொழுதுபோக்குச் செலவுகள் | 13,500 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 13,000 | பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 5,000 |
| மன்ற ஆண்டு விழா வசூல் | 18,000 | அறக்கொடை நாடகக்காட்சி செலவுகள் | 3,000 |
| டென்னிஸ் மைதான கட்டுமானச் செலவுகள் | 7,000 | முதலீடுகள் விற்றது | 12,000 |
| அறக்கொடை நாடகக்காட்சி வசூல் | 4,000 | இறுதி ரொக்க இருப்பு | 12,000 |
| வாடகைச் செலுத்தியது | 1,000 | | |

(விடை: வங்கி இருப்பு: ₹ 50,000) )

7. கீழ்க்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | மைதான வாடகை செலுத்தியது | | 12,000 |
| கைரொக்கம் | 23,000 | | அச்சுக் கட்டணம் | | 5,000 |
| வங்கி ரொக்கம் | 12,000 | 35,000 | வங்கிக் கட்டணம் | | 1,000 |
| அரங்க வாடகை பெற்றது | | 6,000 | கட்டடம் மீதான காப்பீடு | | 2,000 |
| சந்தா பெற்றது | | 9,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | | 16,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | 7,000 | தணிக்கைக் கட்டணம் | | 3,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகைப் பெற்றது | | 2,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | | 4,000 |
| | | | இருப்பு கீ/இ | | |
| | | | கைரொக்கம் | 2,000 | |
| | | | வங்கி ரொக்கம் | 14,000 | 16,000 |
| | | 59,000 | | | 59,000 |

(விடை : பற்றாக்குறை: ₹ 26,000)

10. பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும். அந்த மன்றம் 2016–2017 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா : ₹ 40,000. இதில் 2015–2016 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 5,000 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 3,000 உள்ளடங்கியுள்ளது. 2016–2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 1,000 இன்னும் பெற வேண்டியுள்ளது.

(விடை : வருவாய் மற்றும் செலவினக் கணக்கு : சந்தா: ₹ 33,000;
இருப்புநிலைக் குறிப்பு : சொத்துகள் : பெறவேண்டிய சந்தா : ₹ 1,000;
பொறுப்புகள் : முன்கூட்டிப் பெற்ற சந்தா: ₹ 3,000)

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy 10th to 12th important Questions upload soon.

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

15. பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ₹ |
|---|---|
| மட்டைகள் மற்றும் பந்துகள் தொடக்க இருப்பு | 3,000 |
| அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள் | 17,000 |
| பழைய மட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை | 2,000 |
| மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு | 4,000 |

24. விருதுநகர் கைப்பந்து சங்கத்தின் 2018, டிசம்பர் 31–ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.

ப 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ.

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | விளையாட்டுப் போட்டிச் | | |
| கைரொக்கம் | | 5,000 | செலவுகள் | | 25,000 |
| சந்தா | | | விளையாட்டு அரங்க பராமரிப்பு | | 17,000 |
| 2017 | 10,000 | | செயலாளருக்கான மதிப்பூதியம் | | 18,000 |
| 2018 | 55,000 | | பந்து மற்றும் மட்டைகள் | | |
| 2019 | 5,000 | 70,000 | வாங்கியது | | 22,000 |
| நன்கொடைகள் | | 40,000 | புல் விதைகள் வாங்கியது | | 2,000 |
| விளையாட்டுப் போட்டி | | | நிலைவைப்பு | | 58,000 |
| நிதி வரவுகள் | | 30,000 | பல்வகைச் செலவுகள் | | 3,000 |
| நிலைவைப்பு மீதான வட்டி | | 8,000 | இருப்பு கீ/இ | | |
| இதர வரவுகள் | | 5,000 | கைரொக்கம் | 7,000 | |
| | | | வங்கி ரொக்கம் | 6,000 | 13,000 |
| | | 1,58,000 | | | 1,58,000 |

கூடுதல் தகவல்கள்:

(i) 1.1.2018 அன்று சங்கத்தில் இருந்த முதலீடுகள் ₹ 10,000; வளாகம் மற்றும் மைதானங்கள் ₹ 40,000 ; பந்துகள் மற்றும் மட்டைகள் இருப்பு ₹ 5,000.

(ii) 2017 ஆம் ஆண்டிற்கான சந்தா இன்னும் பெறவேண்டியது ₹ 5,000

(iii) 2018 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹ 6,000.

2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

21. ஏற்காடு இளைஞர் சங்கத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31–ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | சம்பளம் | 14,000 |
| கைரொக்கம் | 9,600 | அலுவலகச் செலவுகள் | 7,200 |
| புத்தகம் வாங்குவதற்காக பெற்ற | | புத்தகங்கள் வாங்கியது | 15,000 |
| அரசு மானியம் | 10,000 | எழுதுபொருள்கள் வாங்கியது | 1,800 |
| சந்தா | 24,800 | செய்தித்தாள் வாங்கியது | 2,100 |
| சேர்க்கைக் கட்டணம் | 2,000 | பரிசுகள் வழங்கியது | 5,000 |
| பரிசுநிதி வரவுகள் | 6,000 | இருப்பு கீ/இ | |
| வங்கி வட்டி | 1,500 | கைரொக்கம் | 9,900 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 1,100 | | |
| | 55,000 | | 55,000 |

கூடுதல் தகவல்கள்:

(i) தொடக்க முதல் நிதி ₹ 20,000

(ii) புத்தகங்கள் இருப்பு (1.4.2018) ₹ 9,200

(iii) கூடியுள்ள சந்தா பெறப்படாதது ₹ 1,700

(iv) 1.4. 2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு ₹ 1,200 மற்றும் 31.3.2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு ₹ 2,000

Activate Windows

## 2.5.3 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் இடையேயான வேறுபாடுகள்

| அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் மற்றும் செலவினக் கணக்கு |
|---|---|---|
| 1. நோக்கம் | இது ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்களை அறிவதற்கு தயாரிக்கப்படுகிறது. | இது நடப்பு ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் (உபரி) அல்லது வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள் (பற்றாக்குறை) குறித்து அறிந்து கொள்ள தயாரிக்கப்படுகிறது. |
| 2. கணக்கின் தன்மை | இது ஒரு சொத்துக் கணக்காகும். இது ரொக்கக் கணக்கின் தொகுப்பாகும். அனைத்து ரொக்கப் பெறுதல்கள் பற்றுப் பக்கத்திலும், ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன. | இது ஒரு பெயரளவுக் கணக்காகும். இது இலாபநட்டக் கணக்கைப் போன்றது. செலவுகள் பற்றுப் பக்கத்திலும் மற்றும் வருமானங்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன. |
| 3. கணக்கியலின் அடிப்படை | இது ரொக்க அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சார்பற்ற விவரங்கள் பதியப்படுவதில்லை. | இது நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சாரா விவரங்களான கொடுபட வேண்டிய செலவுகள், தேய்மானம் போன்றவைகளும் இங்கு பதியப்படும். |
| 4. தொடக்க மற்றும் இறுதி இருப்பு | இது ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கின் தொடக்க இருப்புடன் தொடங்கி, ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கின் இறுதி இருப்புடன் முடிவடைகிறது. | இங்கு தொடக்க இருப்பு என்பது கிடையாது. இது உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடைகிறது. |

Activate Windows

## 2.3.1 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கை தயாரிப்பதற்கான படிநிலைகள்

பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயாரிக்கப் பின்வரும் படிநிலைகளைப் பின்பற்ற வேண்டும்:

(i) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் பற்றுப் பக்கத்தில் தொடக்க ரொக்க இருப்பையும், சாதகமான வங்கி இருப்பையும் பதிவு செய்ய வேண்டும். வங்கி மேல்வரைப்பற்றாக இருந்தால் அதனை வரவுப் பக்கம் தொடக்க இருப்பாக பதிவு செய்ய வேண்டும்.

(ii) அந்த ஆண்டில் மேற்கொண்ட ரொக்கப் பெறுதல்கள் பற்றுப்பக்கத்திலும் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்பட வேண்டும்.

(iii) ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் பதியும் போது அவை வருவாயினத்தைச் சார்ந்ததா அல்லது முதலினத்தைச் சார்ந்ததா என்று வேறுபடுத்தத் தேவையில்லை. அதுபோன்று, அவை முந்தைய ஆண்டுக்குரியதா அல்லது நடப்பாண்டிற்குரியதா அல்லது எதிர் வரும் ஆண்டிற்குரியதா எனவும் வேறுபடுத்த வேண்டியதில்லை.

(iv) பற்றுப் பக்கத்தின் மொத்தம் வரவுப்பக்கத்தின் மொத்தத்தை விட அதிகமாக இருந்தால் இருப்புக் கட்டப்படும் தொகை வரவுப் பக்கத்தில் தோன்றும். இது இறுதி ரொக்கம் அல்லது வங்கி இருப்பினைக் குறிக்கும்.

## 2.5.1 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிப்பதற்கான படிநிலைகள்

பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிப்பதற்கு பின்பற்ற வேண்டிய படிநிலைகள் பின்வருமாறு:

(i) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் உள்ள ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கில் உள்ள தொடக்க மற்றும் இறுதி இருப்புகள் தவிர்க்கப்பட வேண்டும்.

(ii) முதலின வரவுகள் மற்றும் முதலினச் செலவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

(iii) நடப்பாண்டோடு தொடர்புடைய வருவாயின வரவுகள் மட்டும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் எழுதப்பட வேண்டும். முன்கூட்டிப் பெற்ற வருமானங்கள், நடப்பாண்டில் பெற வேண்டிய வருமானம், முந்தைய ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கான தொகை போன்றவைகளுக்குத் தேவையான சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

(iv) அதுபோலவே, நடப்பாண்டோடு தொடர்புடைய வருவாயினச் செலவுகள் மட்டும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். முந்தைய ஆண்டு மற்றும் நடப்பாண்டிற்குரிய கொடுபட வேண்டிய செலவுக்கும், முந்தைய ஆண்டு மற்றும் நடப்பாண்டிற்குரிய முன்கூட்டிச் செலுத்திய செலவுகளுக்கும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

மருதம் அகாடமி YouTube Channel 9659838789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy 10th to 12th important Questions upload soon.